**செப்டம்பர் - 13**

**"இதோ, சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும், எத்தனை இன்பமுமானது." - சங் 133 : 1.**

நம்முடைய கர்த்தரைப்போல சமாதானம் பண்ணுகிறவர்களாக இருக்க நாடுவோமாக. எல்லா சகோதரருடனும் ஆவியின் ஐக்கியத்தில் சமாதானத்தின் கட்டிலே வாசம் பண்ண நாடுவோமாக. நமது சுறுசுறுப்பான வேலைகள், நமது போராடும் தன்மை முதலியவை அந்த பெரிய எதிராளிக்கும், பாவத்தின் எல்லா கிரியைகளுக்கும் நம்முடைய அவயங்களில், நமது சொந்த விழுந்துபோன மாம்சத்திலுள்ளவைகளுக்கும் எதிராக ஈடுபட்டிருப்பதாக. நாமும் எல்லா சகோதரரும் கர்த்தருக்கு நன்றாகப் பிடித்தமான வழியில் இவ்விதமாக நமது சுபாவத்திலுள்ள ஒவ்வொரு போரிடும் அம்சத்துக்காக நாம் போதுமான வேலையைக் காண்போம். ஒருவரை ஒருவர் கட்டுவிப்பதிலும், நமக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்போது எல்லா மனுஷருக்கும், விசேஷமாக விசுவாச வீட்டாருக்கும் நன்மை செய்வதிலும் உபயோகத்தைக் காண்போம்.

**- Z '03, 363 (R 3245)**

அடுத்த வாக்கியம் அவர்களை ஆரோனின் முன்னடையாளமாகக் காண்பித்து நிரூபிக்கிறதினால், இங்கே சொல்லப்பட்டிருக்கிற சகோதரர் இயற்கையானவர்கள் அல்ல, ஆனால் ஆவிக்கடுத்த சகோதரர், பிதாவும் குமாரனும் ஒன்றாய் இருக்கிறது போல அவர்களும் ஒன்றாய் இருப்பதற்காக நமது கர்த்தர் ஜெபித்தாரோ, அதே ஒற்றுமைதான் இங்கே சொல்லப்பட்டிருக்கிற ஒற்றுமை. இந்த ஒற்றுமை சந்தேகமின்றி ஒரு நபருக்குரிய அல்லது அவசியமாக ஏதும் அல்ல. ஆனால் ஒரே பிதாவுக்காக ஒரே கர்த்தருக்கடியில், ஒரே ஞானஸ்நானத்தில் இருக்கிற விசுவாசத்தின், நம்பிக்கையின் அன்பின் நோக்கத்தின் ஒற்றுமை, இந்த ஒற்றுமை நன்மையாலும் இன்பமானதுமாயிருக்கிறது. இந்த உலகப்பிரகாரமான சம்பந்தத்தையும் அதோடு ஒப்பிட முடியாது. இப்பொழுது அபிவிருத்தியிலும் எல்லா நித்தியத்துக்கும் பாக்கியமான நிறைவேறுதலிலும் அது நம்முடையதாயிருப்பதாக. **- P '34, 128.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**சங் 55:14; 119:63; ஆமோஸ் 3:3; மல் 3:16; மத் 18:20; 20:25-28; 23:8; லூக் 22:32; 24:13-15; யோவா 13:34; 17:11,21-23; அப் 1:14; 2:1,42,44-47; ரோம 15:1-7; 1கொரி 1:10; 10:16,17; 12:12,13; கலா 2:9; 6:2,10; எபே 2:14-22;5:2,19,30; பிலி 1:3,5,27; 2:1,2; கொலோ 2:2; 1தெச 4:18; எபி 10:24,25; 13:1; யாக் 5:16; 1பேது 2:17; 3:8,9; 1யோவா 3:14; 4:7,11-13.**

**கோபுர வாசிப்பு : Z '13, 133 (R 5229).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் சத்தியத்தை நான் இந்த வாரத்தின் அனுபவத்தில் கண்டேனா? எப்படி? ஏன்? பலன் என்ன?**